தேதி : 01.07.2026

அசல் வழக்கு எண் : 198/2020

பிரதிவாதி தரப்பு சாட்சி 1 : திரு.பிரதீப்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டார்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு 43 வயதாகிறது. இந்த வழக்கை விஜயாரெட்டியின் மகள்கள் என் மீது தாக்கல் செய்துள்ளார்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விலாசத்தில் தான் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் அந்த சொத்தை கிரயம் பெறும் போது பார்த்தேன். இன்று கூட நான் தாவா சொத்தை பார்த்துவிட்டு வந்தேன். தாவா சொத்து காலி மனையாக தான் உள்ளது. தாவா சொத்தில் வீடு உள்ளது என்றாலும், அந்த வீட்டில் தான் விஜயாரெட்டி மற்றும் அவருடைய மகள்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து காலியாக இல்லை என்றாலும், அதில் தோட்டம் உள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் நியமித்து தாவா சொத்தில் என்ன உள்ளது என்று பார்ப்பதற்கு எனக்கு ஆட்சேபணை கிடையாது. தாவா சொத்தின் கிழக்கில் விஜயாரெட்டியின் நிலம், மேற்கில் கோபால்ரெட்டி நிலம், வடக்கில் நான் கிரயம் பெற்ற நிலம் சர்வே எண் 67/2, தெற்கில் கிருஷ்ணா மற்றும் பில்லையாரெட்டி நிலம் உள்ளது. கோபால்ரெட்டி, கிருஷ்ணாரெட்டி ஆகியோருக்கும் எனக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. தாவா சொத்து பொறுத்து என் பெயரில் கிரய ஆவணம் ஏற்படுத்தும் போது விஜயாரெட்டிக்கு இரண்டு மகள்கள் உள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னால் வழக்கறிஞர் மூலம் எனக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். நான் அந்த அறிவிப்புக்கு பதில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான்

விஜயாரெட்டியை பார்த்தேன். அவர் பார்த்துக் கொள்வதாக சொன்னார். அதனால் பதில் கொடுக்கவில்லை. தற்போது எனக்கும், விஜயாரெட்டிக்கும் எந்த விரோதமும் இல்லை. விஜயாரெட்டியை என் தரப்பில் சாட்சியாக விசாரிக்கலாம். 3வது பிரதிவாதி சிவாரெட்டி யாரென்று எனக்கு தெரியாது. பிரமாண வாக்குமூலத்திலும், பதிலுரையிலும் சிவாரெட்டியும் விஜயாரெட்டியும் அண்ணன் தம்பிகள் என்று கூறியிருந்தால் அதுபற்றி எனக்கு தெரியாது. விஜயாரெட்டியின் மகன் பெயர் பாபு. விஜயாரெட்டியின் மகன் பெயர் ஸ்ரீநாத் ரெட்டி என்றால் சரிதான். அவரை பாபு என்று அழைப்பார்கள். எனக்கு விஜயாரெட்டியை நிலம் வாங்கும் போது தான் பழக்கம். விஜயாரெட்டிக்கும், எனக்கும் நல்ல பழக்கம் என்றாலும், அவருடைய மகள்களை ஏமாற்ற வேண்டி பெயரளவில் என் பெயரில் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான் கிரயம் பெற்றிருந்தால் தாவா சொத்தை சுவாதீனத்தில் எடுத்திருப்பேன் என்றாலும், இன்றுவரை தாவா சொத்து விஜயாரெட்டியின் சுவாதீனத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய சுவாதீனத்தில் தான் உள்ளது. நான் எவ்வாறு சுவாதீனத்தில் உள்ளேன் என்றால் 2020 ம் ஆண்டு தாவா சொத்தை சுற்றி வேலி போடுவதற்காக கற்களை இறக்கியிருந்தோம். அப்போது விஜயாரெட்டி பிரச்சனை செய்ததால் வேலி போட முடியாமல் போனது. அவ்வாறு விஜயாரெட்டி பிரச்சனை செய்ததற்கு ஜுஜுவாடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகாரை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஜுஜுவாடியில் காவல் நிலையம் இல்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான் புகார் கொடுத்திருந்தால் தாவா சொத்து அமைந்துள்ள ஹட்கோ காவல் நிலையத்தில் தான் புகார் கொடுத்திருக்க முடியும் என்றாலும், நான் இந்த ஊருக்கு புதிது என்பதால் அதுபற்றி எனக்கு

தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் 2வது வாதி சியாமளாவை நான் பார்த்ததில்லை. அவரை எனக்கு தெரியாது. 2வது வாதி தாவா சொத்து வீட்டில் குடியிருக்கிறேன் என்றாலும், நான் தாவா சொத்திற்கு சென்றிருந்தால் 2வது வாதியை பார்த்திருப்பேன் என்றாலும், அதனால் நான் தாவா சொத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்திலும், பதிலுரையிலும் 2020 ம் ஆண்டு நான் வேலி போட சென்ற போது விஜயரெட்டி தடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு ஒரு சம்பவம் நடந்திருந்தால் நான் சொல்லியிருப்பேன் என்றாலும், அவ்வாறு நடக்காததால் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. விஜயாரெட்டிக்கும், 3வது பிரதிவாதி சிவாரெட்டிக்கும் பாகப்பிரிவினை ஏற்பட்டது பற்றி எனக்கு தெரியாது. பிராதில் உள்ள விவரங்களை படித்து தெரிந்து கொண்டேன். அதில் 2, 3 பிரதிவாதிகள் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பற்றி கூறியுள்ளார்கள் என்றாலும், தாவா சர்வே எண்ணில் கிழக்கு பக்கம் 3 பிரதிவாதிக்கும், மேற்கு பக்கம் 2வது பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்டதாக கூறியுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உண்மையிலேயே தாவா சொத்திற்கு கிழக்கு பக்கம் 3வது பிரதிவாதி நிலம் என்று சொல்லியிருக்க வேண்டும் என்றாலும், பெயரளவில் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்பதால் கிழக்கு பக்கம் 1வது பிரதிவாதி நிலம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.தாவா சொத்தை 4 பாகங்களாக பிரித்து வாதிகளுக்கு தலா ஒரு பங்கும், 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு ஒரு பங்கும் கேட்டுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2வது பிரதிவாதிக்கும் ஒரு பங்கு இருப்பதால் தான் அவரை இவ்வழக்கில் தரப்பினராக சரியாக சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல. நானும் விஜயாரெட்டியும் சேர்ந்து அவருடைய மகள்களை ஏமாற்ற வேண்டிய பெயரளவில் கிரய ஆவணம்

ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. நான் அந்த ஆவணத்திற்கு கிரய தொகை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் என் வயது 35 என்று தவறாக சொல்லப்பட்டுள்ளது என்றாலும், அதனால் நான் சொல்லி பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read over to the witness and acknowledged by him/her to be correct.

SANTHOSH BASKAR Digitally signed by SANTHOSH BASKAR

Additional District Judge,
Hosur.